# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் **சாதாரணக்கூட்டம்** 26-06-2025 **வியாழக்கிழமை காலை** 10.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.உ.ரா.விஜயலெஷ்மி கொண்டு வரும் தீர்மானம்

1) 7-வது வார்டில் படப்பறை குளத்தில் விபத்துக்கள் அதிகமாக நடக்கிறது. பொது மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு தடுப்புவேலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1343 தீர்மானிக்கப்பட்டது.

9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானங்கள்

1) விளவங்கோடு வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அருகில் புதிதாக கட்டிய கண்மாயில் கழிவு பொருட்கள் வராமல் இருக்க இரண்டு கிரில் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1344 தீர்மானிக்கப்பட்டது.

2) விளவங்கோடு அரசு மேல்நிலைப்பள்ளி நுழைவுவாயில் அருகாமையில் கட்டிய கண்மாயில் கழிவு பொருட்கள் சென்று அடைக்காமல் இருக்க ஒருகிரில்லும், ஓடை முடியும் இடத்தில் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படாத வண்ணம் மூடிக்கு ஒரு கிரில்லும் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1345 தீர்மானிக்கப்பட்டது.

10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஞா. ஜெயின் சாந்தி கொண்டு வரும் தீர்மானங்கள்

1) பழவார் பிலாமன் விளையிலிருந்து அற்றுக்குச் செல்லும் பாதையில் அருகில் உள்ள சொத்திலிருந்து மண் அரிப்பு ஏற்பட்டு மண் தொடர்ந்து பாதையில் விழுவதால் பொதுமக்கள் பாதையை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் தடுப்பு சுவர் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1346 தீர்மானிக்கப்பட்டது.

2) குழித்துறை அரசு விளவங்கோடு பள்ளியிலிருந்து தீயணைப்பு நிலையம் வரை உள்ள மழைநீர் ஒடையை தூர்வாரி சரி செய்து சிமெண்ட் சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1347 தீர்மானிக்கப்பட்டது.

3) தேவிகுமாரி கல்லூரி சாலையில் உள்ள மழைநீர் ஒடையை சரி செய்து சிமெண்ட் சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1348 தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.1</u>

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் கிரைண்டர் பழுதாகி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே கிரைண்டர் பழுது நீக்கம் செய்து சரிசெய்யும் பணிக்கு 28-05-2025-ம் தேதிய விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. விபரம்

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | S.R.P. ENGINEERING WORKS | 8680/- |
| 2 | MOON ELECTRICAL ENGINEERING WORKS | 8800/- |
| 3 | R. Jayasingh, Work Contractor | 8296/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியை கொடுத்துள்ள திரு.R. ஜெயசிங் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கிடவும், மேற்படி செலவுத்தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1221/2025/அ1.

மன்றத்தீர்மான எண்.1349 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்கள் கடைகள் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள பெயர் பலகை தமிழில் பெயர்

பலகை வைக்க அறிவிப்பு நோட்டீஸ் மற்றும் மாதிரி பெயர் பலகைகள் நோட்டீஸ் மற்றும் தமிழில் பெயர் பலகை வைக்க கடைகள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கு தொழில் உரிமம் ரத்து செய்யப்படும், அபாரதம் விதிக்கப்படும் என அறிவிப்பு நோட்டீஸ் செலவின தொகை ரூ,9500/-யினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. ராதாகிருஷ்ணன் என்பவரால் செலவினம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. ராதாகிருஷ்ணன் என்பவருக்கு பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**3256/2023/எச்1.

மன்றத்தீர்மான எண்.1350 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சியின் வளர்ச்சி பணிகள் மற்றும் நான்காண்டு சாதனைகளை விளக்கும் பொருட்டு நாளிதழ்கள் மூலம் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்ட விவரப்படி செலவினப் பட்டியல்கள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | நாளிதழ் பெயர் | விளம்பரம் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | வளர்ச்சி பணிகள் | 9854/- |
| 2 | தமிழ்முரசு | நான்காண்டு சாதனை | 9744/- |
| 3 | தினகரன் | நான்காண்டு சாதனை | 9975/- |
| 4 | தினத்தந்தி | நான்காண்டு சாதனை | 9840/- |
| 5 | விடுதலை | நான்காண்டு சாதனை | 8400/- |
| 6 | மாலைமலர் | நான்காண்டு சாதனை | 9912/- |
| 7 | தினமலர் | நான்காண்டு சாதனை | 11592/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற செலவினப் பட்டியல் தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.1351 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணியாற்றி வரும் தூய்மை பணியாளர்கள் மற்றும் களபணியாளர்களுக்கு தற்போது வடகிழக்கு பருவ மழை அதிகமாக உள்ளதால் அத்தியவாசிய பணிகள் மேற்கொள்ள உள்ளதால் அவசியம் கருதி மழை சட்டை வாங்கி வழங்கிட பணியாளர்களின் விபரம் கீழ்கண்டவாறு.

1) ஆண் தூய்மை பணியாளர்கள் = 15
2) பெண் தூய்மை பணியாளர்கள் = 11
3) துப்புரவு பணி மேற்பார்வையாளர் (3+1) = 4
4) ஓட்டுநர் = 4
5) சுகாதார ஆய்வாளர் = 1
6) ஆணையாளர் = 1
7) களப்பணியாளர் = 1

-------------
37
--------------

எனவே மேற்படி மொத்த 37 பணியாளர்களுக்கு மழைசட்டை வாங்குவதற்கான உத்தேச செலவின தொகை ரூ.40,000/-யினை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**3055/2022/**எச்**1.

மன்றத்தீர்மான எண்.1352 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடை எண்.1-ற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 13-06-2025 அன்று கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்துக்கொள்ளவில்லை. கீழ்கண்டுள்ளவதறு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | பெயர் / முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | B. Bruno,<br>3/23C, Bethel Street, Marthandam | 4100/- |
| 2 | T. Lawrence,<br>2-11, Mulluvilai, North Street, Marthandam | 3200/- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல் மாதவாடகை தெரிவித்துள்ள B. Bruno என்பவரது ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4100/- கூடுதலாக உள்ளது. எனவே மேற்படியருக்கு கடையினை ஒப்படைப்பு செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3066/2022/அ2.

மன்றத்தீர்மான எண்.1353 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் வார்டு எண்.9-ல் குழித்துறை சந்திப்பில் 9-41/6 A, B, C கடை முன்பு இருக்கும் ஆட்டோ ஸ்டேன்ட் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றிட திரு.கே. சிவசங்கரன் என்பவரால் மதுரை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட அவமதிப்பு வழக்கு எண்.CONT P(MD)No.1057/2025-க்கு இந்நகராட்சி சார்பில் ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்தமைக்கு வழக்கறிஞர் திரு.P. ஆதிமூலபாண்டியன் என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/- நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2874/2024/எப்1.

மன்றத்தீர்மான எண்.1354 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சி கருங்கல் சாலையில் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024-2025 திட்டத்தின்கீழ் 14.60 கோடி மதிப்பீட்டில் நவீன சந்தை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட கட்டுமான பணியை 05-06-2025 அன்று மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர், விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆகியோர் கூட்டாக தள ஆய்வு மேற்கொண்டதில் சந்தை கட்டும் மையப் பகுதியில் IDSMT திட்டம் 2005-2006-ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் 28 கடைகள் சுமார் 19 வருடங்களுக்கு முன் கட்டபட்ட மிகவும் பழுதடைந்த கட்டிடத்தை அப்புறப்படுத்திட அறிவுறுத்தப்பட்டது. தற்போது கட்டுமான பணி 75% முடிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பழைய கட்டிடம் பயன்படுத்த முடியாமலும், புதிதாக கட்டும் கட்டிடத்திற்கு இடையூறாகவும் உள்ளதால் அக்கட்டிடத்தை

உரிய முறையில் அனுமதிப் பெற்று இடித்து அப்புறப்படுத்தி புதிய கடைகள் கட்டுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1791/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1355 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சி வார்டு எண்.13 மாங்காட்டுவிளை பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத காரணத்தினால் மேற்கண்ட பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்திட ரூ.2.10 இலட்சம் உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1792/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1356 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சி வார்டு எண்.10 தேவிகுமாரி கல்லூரி சாலை (அண்ணாகாலணி சாலை Unicode No.149010R052)-ல் மேற்கு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து மழைநீர் அங்குள்ள குடியிருப்புகளுக்கு சென்று பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.7.20 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1793/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1357 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 10

குழித்துறை நகராட்சி வார்டு எண்.15 கோடியாவிளை சப்ரோடு-2 (Unicode No.149015S043)-ல் பேவர் பிளாக் சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட சாலையை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3.60 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1794/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1358 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சி வார்டு எண்.15 கொல்லக்குளம் முதல் வடக்கு தெரு சாலையில் (Unicode No.149014R069) Transformer முதல் Cross Street வரை உள்ள மழைநீர் வடிகால் பழுது ஏற்பட்டு பொதுமக்களுக்கு சுகாதார கேடாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட மழைநீர் வடிகாலை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1.40 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1795/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1359 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சி பொதுபணி துறைக்கு சொந்தமான குழித்துறை சப்பாத்து பாலம் அருகே பொதுமக்கள் தினந்தோறும் நீராடி வருகின்றனர். மேற்கண்ட இடத்தில் அவ்வப்போது உயிர்பலி ஏற்படுவதால் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அந்த இடத்தில் தடுப்புவேலி அமைக்க அறிவுறுத்தப்பட்டனர். அதன் அடிப்படையில் மேற்கண்ட இடம் ஆய்வு

செய்து தடுப்புவேலி அமைத்திட உத்தேச மதிப்பீடு ரூ.9.40 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1796/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1360 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.7 ஆலஞ்சோலை சாலையில் தபால் நிலையம் சந்திப்பு முதல் அரசு நடுநிலைப்பள்ளி வரை உள்ள மழைநீர் வடிகால் பழுது ஏற்பட்டு மழைகாலங்களில் மழைநீர் அங்குள்ள குடியிருப்புகளுக்கு புகுந்து சேதம் விளைவிக்கும் வண்ணம் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1790/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1361 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.19-ல் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான P.P.முனுசாமி வணிகவளாகத்தில் போதிய கழிப்பிட வசதி இல்லாத காரணத்தால் வணிக வளாகத்தில் உள்ள குத்தகைதாரர்கள் மற்றும் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி P.P.முனுசாமி வணிகவளாகத்தில் புதிதாக கழிப்பிடம் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.70 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1789/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1362 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 100-வது வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு பொதுமக்கள் கல்லூரியில் பயின்றுவரும் மாணவ/ மாணவியர்கள் மற்றும் பள்ளிகளில் பயின்றுவரும் மாணவ/ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் மருத்துவதுறை சார்ந்த உபகரண பொருட்கள், பதப்படுத்தப்பட்ட மனித உறுப்புகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட மனித உடல்களை கண்காட்சியில் அமைத்திட காரைகோணம் மருத்துவ கல்லூரியின் முதல்வர் கடிதத்தில் செலவு தொகை 20 தினங்களுக்கு ரூ.1,02,000/- வழங்கிட கோரியுள்ளார். எனவே மேற்படி தொகையினை வாவுபலி பொருட்காட்சி கணக்கிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**650/2025/**அ**2

மன்றத்தீர்மான எண்.1363 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் செயல்பட்டு வந்துள்ள MCC மற்றும் RCC-யில் சுத்தம் செய்வதற்கான பைப் (ஓஸ்) மற்றும் RRC, MRF-யில் வரகூடிய பிளாஸ்டிக் கழிவுகளை பேலிங் செய்வதற்கு ரோப் (கயிறு) ஆகிய அனைத்தும் செலவின தொகை ரூ.17,500/-யினை திரு. மரியதாஸ், துப்புரவு பணி மேற்பார்வையாளர் என்பவரால் செலவினம் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி செலவின தொகையினை (IEC Activities) நிதியிலிருந்து திரு. மரியதாஸ், துப்புரவு பணி மேற்பார்வையாளர் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**3256/2023/**எச்**1

மன்றத்தீர்மான எண்.1364 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.17</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் செயல்பட்டு வந்துள்ள புல்வெட்டும் மிஷினின் ரோப் மற்றும் நாய்கள் பிடிப்பதற்காக நாய் கூண்டுகான பைப் வகைகள் ஆகிய அனைத்தும் செலவின தொகை ரூ.22,000/-யினை திரு. ராதாகிருஷ்ணன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் என்பவரால் செலவினம் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி செலவின தொகையினை

(IEC Activities) நிதியிலிருந்து திரு. ராதாகிருஷ்ணன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**3256/2023/**எச்**1

மன்றத்தீர்மான எண்.1365 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறைநகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.